BRITISH COUNCIL

# சர்வதேச கொள்கை பிரகடனம்

## சிறுவர் பாதுகாப்பு

கலாசார உறவுகள் மற்றும் கல்வி வாய்ப்புகள் தொடர்பில் ஐக்கிய இராஜ்ஜியத்தின் சர்வதேச ஸ்தாபனமாக பிரிட்டிஷ் கவுன்சில் திகழ்கிறது.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் அனைவரும் பொறுப்பேற்று செயலாற்றுவதன் மூலமாக ஒவ்வொரு சிறுவரையும் பாதுகாக்க முடியும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். சிறுவர்களின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் முக்கியமானவை என்பதை நாம் வரவேற்பதுடன், சகல விதமான பாதிப்புகளிலிருந்தும் சிறுவர்கள் பாதுகாக்கப்படுவதற்கான உரிமையை அவர்கள் கொண்டுள்ளனர் என்பதையும் வரவேற்கிறோம். சிறுவர்களுடன் நாம் தொடர்பு கொள்ளும் நடவடிக்கைகள் அல்லது சிறுவர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் போன்றவற்றில் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது என்பது எமது அடிப்படை கடமையாகவும் அமைந்துள்ளது. இதில் பின்வரும் நடவடிக்கைகளால் எழக்கூடிய ஆபத்துக்கள் அல்லது ஆபத்துக்கான இடரிலிருந்து பாதுகாக்கும் கடமை அடங்கியுள்ளன:

- எமது ஊழியர்கள் அல்லது பங்காளர்களின் தவறான நடத்தை
- மோசமான செயன்முறை
- எமது கற்கைகள் மற்றும் செயற்பாடுகள் மோசமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை

இதை நாம் ஐக்கிய இராஜ்ஜியத்தின் சிறுவர் பாதுகாப்பு சட்டங்களினூடாகவும், நாம் இயங்கும் நாடுகளில் காணப்படும் சட்ட விதிமுறைகளின் பிரகாரமும் எய்த எதிர்பார்ப்பதுடன், ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் மாநாட்டின் (UNCRC) 1989 இன் ஆக்கம் 19 பிரகாரம் அமைந்துள்ளது.

பிரிட்டிஷ் கவுன்சிலை பொறுத்தமட்டில் 18 வயதை பூர்த்தி செய்யாத எந்தவொரு நபரும் (UNCRC 1989) சிறுவர்களாக கருதப்படுவார்கள்.

## பின்வரும் விடயங்கள் தொடர்பில் பிரிட்டிஷ் கவுன்சில் தன்னை அர்ப்பணித்துள்ளது:

- சிறுவர்களுக்கு மதிப்பளித்தல், பெறுமதி சேர்த்தல் மற்றும் செவிமடுத்தல்.
- ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் போது அவசியமான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல்
- ஊழியர்களுக்காக உறுதியான சிறுவர் பாதுகாப்பு கட்டமைப்புகள் மற்றும் செயன்முறைகளை பேணுதல்.
- திட்டமிடல் மற்றும் செயலில் காணப்படும் சிறுவர் பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பான பொதுவான புரிந்துணர்வு பற்றி ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல்.
- சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் சிறந்த செயன்முறைகளை சிறுவர்களுடனும் பெற்றோர்கள்/பாதுகாவலர்களுடன் பகிர்ந்து கொள்ளல்.
- ஏதேனும் நிலைமைகள் சம்பந்தமாக தொடர்புடைய முகவர் அமைப்புகளுக்கு அறிவித்து, பெற்றோரையும், சிறுவர்களையும் முறையாக ஈடுபடுத்தல்.
- தெளிவான செயன்முறைகள், மேற்பார்வை மற்றும் உதவிகளினூடாக ஊழியர்களுக்கு வினைத்திறன் வாய்ந்த நிர்வாகம் வழங்கப்படும்.

இந்த கொள்கையை நிறைவேற்றுவதற்கு அவசியமான மற்றும் பொருத்தமான வளங்களை நாம் வழங்குவதுடன், அவை தொடர்பான முறையான தெளிவுபடுத்தல்கள் மற்றும் புரிந்துணர்வு ஏற்பட்டமையை உறுதிசெய்வோம்.

வருடாந்தம் இந்த சர்வதேச கொள்கையை பிரிட்டிஷ் கவுன்சில் மீளாய்வு செய்யும் என்பதுடன், புதிய சட்டபூர்வ மற்றும் ஒழுங்குபடுத்தல் அபிவிருத்திகளை பிரதிபலித்து சிறந்த செயன்முறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்யும்.

ChildLine Sri Lanka 1929

**BRITISH COUNCIL** CONTACTS
Colombo
**Anju** Moses (011)4521521
Kandy
**Sujatha** Sumathipala (081)2222410
Jaffna
**Rebecca** Rawnson (021)7521521